POST WITHOUT PRE-PAYMENT LICENCE NO. G. 6. TN. MS. C. P. P. 55

ANNA Leading Progressive Tamil Daily of the People

புரட்சித்தலைவர் பங்கேற்கும் மாபெரும்கூட்டம்

Regd. No. TN - MS (C) 244 Phone: 420212 4 பக்கம் விலை 60 காசு

அண்ணா

நிறுவனர்: எம்.ஜி.ஆர்

மலர் 10] சென்னை 21-3-1986 வெள்ளி -:- வெளியூர் 22-3-1986 சனி [இதழ் 150

சென்னையில் 30ந் தேதி நடத்த சிறப்புமிகு ஏற்பாடு

சென்னை, மார்ச் 21- கழக செயற்குழு-பொதுக்குழு முடிவுகளை விளக்கி சென்னையில் புரட்சித்தலைவர் பங்கேற்கும் பிரமாண்டமான கழகப் பொதுக்கூட்டம் வரும் 30-ந் தேதி நடைபெறுகிறது.

கழக செயற்குழு, பொதுக்குழு சென்னையில் வரும் 29, 30 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

செயற்குழு- பொதுக்குழு கூட்டம் முடிந்ததும், அவற்றில் எடுக்கப்பட்ட முடிவுகளை விளக்க வட சென்னையில் வருகிற 30ந் தேதி மாலை பிரமாண்டமான கழகப் பொதுக்கூட்டம் நடக்கிறது.

முதல்வர் புரட்சித்தலைவர் இந்த பொதுக் கூட்டத்தில்பங்கேற்கிறார்.

பொதுக்கூட்டத்துக்கான ஏற்பாடுகள் சிறப்பான முறையில் செய்யப்படுகின்றன என்று சென்னை மாவட்ட கழகச் செயலாளர் ஜேப்பியார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்,

புரட்சித்தலைவருடன் அமைச்சர்கள், கழக முன்னணியினர் பங்கேற்கிறார்கள் என்றும் ஜேப்பியார் கூறினார்.

முதல்வர் புரட்சித்தலைவர் பங்கேற்கும் இப்பொதுக்கூட்டத்தை மாபெரும் மாநாடு போல் நடத்த சிறப்புமிகு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்றும்ஜேப்பியார் எம்.எல்.சி. தெரிவித்தார்.

சென்னை மாவட்ட கழகம் சார்பில் நடைபெறும் இந்தப் பொதுக்கூட்டம் நடக்கும் இடம் பற்றி இரண்டு நாளில் அறிவிப்பதாகவும் ஜேப்பியார் கூறினார்.

அண்டேக்கு சட்டசபை பாராட்டு

சென்னை, மார்ச் 21 சிறந்த சமூக மருத்துவ சேவைக்காக பி. சி. ராய் விருது பெற்ற மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அண்டேக்கு தமிழ்நாடு சட்டசபை சார்பில் சபாநாயகர் பி, எச். பாண்டியன் பாராட்டு தெரிவித்தார்.

அமைச்சர்அண்டே பதிலளித்துப் பேசுகையில், முதல்வர் புரட்சித்தலைவர் கொடுத்த ஊக்கம், டாக்டர்கள்- மருத்துவ ஊழியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பால் தான் இந்த விருது கிடைத்துள்ளது என்று கூறினார்.

பஞ்சாபில் முற்றுகை போராட்டம்: துப்பாக்கிச் சூடு

பஞ்சாப், மார்ச் 21— அகில இந்திய சீக்கியமாணவர்கள் அமைப்பும், ஐக்கிய அகாலி பிரிவினரும் பஞ்சாப் மாநில சட்டசபை முன் முற்றுகை போராட்டம் நடத்த முயன்றனர்.

இதையடுத்து ஏற்பட்ட கலவரத்தில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் கொல்லப்பட்டனர்பலர்காயமடைந்தனர்.

தி. மு. க. உறுப்பினருக்கு சபாநாயகர் எச்சரிக்கை

சென்னை. மார்ச் 21- சட்டசபையில் தி மு.க. உறுப்பினருக்கு சபாநாயகர் எச்சரிக்கை விடுத்தார்.

இன்று சட்டபேரவையில் வரவு செலவு திட்ட மீதான விவாதத்தில் கழக உறுப்பினர் ஏ. வ. வேலு பேசினார். அவர் பேசுகையில் 32 சர்க்கரை ஆலைகள் தமிழகத்தில் ஏற்பட மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டது.

ஆனால் அதற்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. 10லட்சம் வீடுகள் கட்டி முடிக்க புரட்சித்தலைவர் திட்டமிட்டுள்ளார். நினைத்ததை முடிப்பவர் புரட்சித்தலைவர் என்று கூறினார்.

புரட்சித்தலைவர் இல்லத்தில் முதல்வர் தொலைபேசி இயங்கவில்லை என்று பேசினார்கள். தொலைபேசி இல்லாமல் பொதுமக்களின் புகார்களை எப்படி அவருக்குச் சொல்வது என்று ரகுமான்கான் குறிப்பிட்டு பேசினார்.

(அப்போது ரகுமான்கான் (தி மு க) வெளியேஇருந்து அவைக்குள் வந்தார்.)

ரகுமான்கான்:- நானே பலமுறை முதலமைச்சர் இல்லத்துக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயன்றேன் இடைக்கவில்லை என்று கூறினார்.

அமைச்சர் ராசாராம்:- முதல்வருடன் தொலைபேசி மூலம் தான்தொடர்பு கொள்ள வேண்டும் என்பது இல்லை.

அவர் இல்லத்தில் தொலைபேசி தொடர்பு இல்லாத போது கூட முதல்வர் அலுவலகம் வந்து சென்று கொண்டிருந்தார். அப்போது கூட முக்கிய பிரச்சினையாக இருந்தால் தொடர்பு கொண்டிருக்கலாம்.

அலுவலகங்களில் தொலைபேசி தொடர்ந்து செயல்பட்டு வந்தது, அப்போது கூட தொடர்பு கொண்டிருக்கலாம்.

(இந்த சம்பவம் நடைபெற்றபோது துணை சபாநாயகர் வி.பி. பாலசுப்பிரமணியம் இருக்கையில் இருந்தார்.)

தி மு.க. உறுப்பினர் ரகுமான்கான் மேலும் எழுந்து நின்று கூச்சல் போட்டு ஏதோ பேசினார் அப்போது சபாநாயகர் பி.எச். பாண்டியன் சபைக்கு வந்து அமர்ந்தார்.

பி. எச். பாண்டியன் பேசியதாவது:-

பிரேமா கொலை வழக்கு பற்றி குற்றம் சாட்டியிருக்கிறீர்கள். கல்வி அமைச்சர் மீதும் குற்றம்சாட்டி பேசினீர்கள். இதற்கு ஆதாரம் கொடுப்பதாக சொன்னீர்கள் ஆனால் கொடுக்க வில்லை, உங்கள் குற்றச்சாட்டுகளுக்கு ஆதார பூர்வமான விவரங்களை நீங்கள் கொடுக்காத வரை நான் உங்களை இங்கு பேச அனுமதிக்கப் போவதில்லை உங்களை வெளியேற்ற நேரிடும். ஊழல் என்று ஏதாவது பேசிவிட்டு செல்வது முறையல்ல முதலமைச்சரும் சட்டமன்ற உறுப்பினர். முதலமைச்சர் மற்றும் அனைத்து உறுப்பினர்களின் கண்ணியத்தை காப்பாற்ற வேண்டிய பொறுப்பில் நான் இருக்கிறேன். எந்த குற்றச்சாட்டும் உறுப்பினர் மீதுவரப்படுமானால்அதை எழுதித் தரவேண்டும்.

குற்றச்சாட்டுகள் ஆதார பூர்வமாக நிருபிக்கப்படவில்லையென்றால் அதன் மீதான நடவடிக்கைக்கு உறுப்பினர் உட்பட வேண்டும்.

இவ்வாறு பி. எச். பாண்டியன் பேசினார். அப்போது ரகுமான் கான் சில கடிதங்களை கையில் வைத்துக் கொண்டு இதோ ஆதாரம் என்று கூறினார்.

டாக்டர் நாவலர்: நீங்கள் கொடுப்பது ஆதாரமாக இருந்தால் அதை ஒரு கவரிங் லெட்டருடன் தர வேண்டும்

இதற்கு முன்னதாக ரகுமான்கான் பேசினார் கழக உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். சபையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. அப்போது ஏற்பட்ட வாசகங்களை சபைக் குறிப்பிலிருந்து நீக்க நாவலர் கோரினார். அந்த பேச்சுக்கள் சபை குறிப்பிலிருந்து நீக்கப்பட்டன. தொடர்ந்து வேலு பேசினார்.

புரட்சிதலைவர்பங்கேற்ற பெரியவர்மகன்மணவிழா

சென்னை,மார்ச் 21- பெரியவர் எம். ஜி சக்கரபாணி மகன் திருமணம் இன்று நடந்தது மேலவைத்தலைவர் ம. பொ. சி. தலைமையில் நடைபெற்ற இந்த திருமண விழாவில் முதல்வர் புரட்சித்தலைவா பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்.

பெரியவர் எம். ஜி சக்கரபாணியின் மகன் விஜய குமாருக்கும், எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் மேலாளராக இருந்த காலஞ்சென்ற குஞ்சப்பனின் புதல்வி கீதாவுக்கும் இன்று காலை ஏ வி. எம் ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது

இந்தமண விழாவில்பங்கேற்க முதல்வர் புரட்சித் தலைவர் 8.50 மணிக்கு திருமணமண்டபத்துக்கு வந்தார். புரட்சித்தலைவர் வந்ததும் வாழ்த்து முழக்கம் எழும்பியது மக்களின் அன்பான வாழ்த்துக்களை பெற்ற முதல்வர் புரட்சித் தலைவா சிறிது நேரம் கலை, அரசியல் உலக பிரமுகர்களுடன் அளவளாவினார் இதற்குமுன்பாகவே முதல்வரின் துணைவியார் ஜானகி அம்மையார் மணபந்தலுக்கு வந்தார்.

மேலவைத் தலைவர் ம.பொ.சி.

பின்னர் 9 மணிக்கு பெரியவர் சக்கரபாணியை மேடைக்கு செல்லுமாறு வேண்ட பெரியவா மணமேடைக்கு சென்றார். அவரைத் தொடர்ந்து மேலவைத் தலைவர் ம. பொ. சியும், முதல்வர் புரட்சித்தலைவரும மணமேடைக்குச் சென்றனர்.

மணவிழாவுக்கு வந்தவர்களை அமைச்சர் ஆர்.எம்.வீ. வரவேற்றுப் பேசினார்.

தொடர்ந்து 9.10 மணிக்கு மலர் மாலையை புரட்சித்தலைவர் எடுத்துத்தர மேலவைத்தலைவர் ம. பொ. சி. மணமக்கள் கையில் தந்து மாலை மாற்றச் சொன்னார். பின்னர் மங்கல நாணை எடுத்து மணமகன் கையில் தந்து மணமகள் கழுத்தில் கட்டச் சொல்லி திருமணத்தை நடத்தி வைத்தார். மணமக்கள் மோதிரம் மாற்றிக் கொண்டனர் அப்போது மண மக்கள் வாழ்க என்று மண விழாவிற்கு வந்திருந்தவர்கள் முழக்கம் எழுப்பி வாழ்த்தினர். பின்னர் மணமக்கள் மேலவைத்தலைவர் ம பொ. சி பெரியவர் சக்கரபாணி புரட்சித் தலைவர் ஆகியோரை வணங்கி ஆசிபெற்றனர்.

மணமக்களுக்கு வாழ்த்து

மண மக்களை வாழ்த்தி மேலவைத் தலைவர் ம பொ சி.கழகப் பொதுச் செயலாளர் இராகவானந்தம்அமைச்சர்கள்ராசாராம் அண்டே,மற்றும் கி. ஆ.பெ விசுவநாதம். திருக்குறளார், தொழில் முதலீட்டு கழகத் தலைவர் சுலோசனா சம்பத், நீதிபதி மோகன், கரூர் வைஸ்யா பாங்கு தலைவர் ராவ், நடிகர் தங்கவேலு ஆகியோர் பேசினர்.

மேலவைத் தலைவர் ம. பொ. சி. பேசுகையில் கூறியதாவது:—

புரட்சித்தலைவர் புனர் ஜென்மம் எடுத்தபின் எத்தனையோ திருமணங்களை நடத்தி வைத்திருக்கிறார். அவரது குடும்பத்தில் நடைபெறும் முதல் திருமணம் இது.

மணமக்கள் பெறக்கூடிய பிள்ளைகள் சகோதர ஒற்றுமைக்கு பெரியவர் எம். ஜி. சக்கரபாணி புரட்சித்தலைவர்போலும். கணவன் மனைவி தம்பதிகள் ஒற்றுமைக்கு இந்த சகோதரர்களின் குடும்பம் போலவும் நேர்மையாக பொருளை ஈட்டி பிறருக்கு கொடுப்பதில் புரட்சித் தலைவா போலவும் வாழ வேண்டும்.

இவவாறு மேலவைத் தலைவர் ம.பொ.சி, பேசினார்.

கழகப் பொதுச் செயலாளர் இராகவானந்தம் பேசுகையில்,மணமக்கள் தங்கள் பெற்றோர்களைப் போல் புகழ் ஈட்டிவாழ வேண்டும் என்று வாழ்த்தினார்.

கி.ஆ.பெ விசுவநாதம் பேசுகையில் மணமக்கள் நாட்டுக்கும் மொழிக்கும் சமுதாயத்திற்கும் மக்களுக்கும் செய்ய வேண்டிய தொண்டுகளை செய்பவர்களாக வாழ வேண்டும் என்று வாழ்த்தினார்.

பெரியவர் எம் ஜி.சக்கரபாணி நன்றி கூறினார்.

மணவிழாவில் தலைமை செயலாளர் அந்தோணி அமைச்சர்கள் பண்ருட்டி ராமச்சந்திரன், கே.ஏ.கே, ப.உ.ச. ஆனூர் ஜெகதீசன் பெரியவா பக்தவத்சலம், அமைப்புச் செயலாளர் சத்தியவாணிமுத்து வாரிய தலைவர்கள் திருப்பூர் மணிமாறன், கோடம்பாக்கம் குமார், ஜே, சி. டி. பிரபாகரன், மன்னை அம்பிகாபதி, திட்டக்குழு துணைத்தலைவர் பாவலர் முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்ணா நம்பி. ஏ: சி: சண்முகம், ராசாங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் சேலம் ஆறுமுகம், சைதை துரை சாமி, கே, வி, கந்தசாமி, மேலவை உறுப்பினர்கள் ஆர். டி. சீதாபதி கவிஞர் முத்துலிங்கம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

திரையுலகத்தை சேர்ந்த பாக்யராஜ், பாரதிராஜா, பாலாஜி,ஏ, வி எம். குமரன் நாகேஷ், ராதா. நம்பியார். சுஜாதா, பத்மினி சௌக்கார்ஜானகி எஸ்.பி,முத்துராமன் இசை அமைப்பாளர் கணேஷ், கமலா தியேட்டர் அதிபர் சிதம்பரம் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

மணவிழா மேடையின் இரு பக்கத்திலும் அறிஞர் அண்ணாவின் படமும், அன்னை சத்யாவின் படமும் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு அதன் முன் குத்துவிளக்கு எரிந்து கொண்டிருந்தது.

மணவிழா வாசலில்இயக்குனர் குமரி சண்முகம் மற்றும் பெரியவரின் மகள்கள் அனைவரையும் வரவேற்றனர்.

சென்னை நகரில் மாநாட்டு அரங்கு

சென்னை. மார்ச் 21— டெல்லியில் உள்ள விஞ்ஞான பவன் மாநாட்டு மண்டபம் போல சென்னையில் ஒரு மண்டபம் கட்டப்படும் என்று நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் கூறினார்.

சட்ட பேரவையில் கழக உறுப்பினர் வளர்மதி மற்றும் சில உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கு நிதி அமைசசர் டாக்டர் நாவலர் பதிலளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

வெளி நாடுகளிலிருந்து இந்தியாவிற்கும், குறிப்பாக தமிழ்நாட்டிற்கும் வரும் பிரமுகர்கள் மற்றும் தூதுவர்கள் அல்லது மாநாட்டில் கலந்து கொள்ள வரும் அறிஞர் பெருமக்கள் ஆகியோர் தக்க வசதிகளுடன் கலந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் மாநாட்டு அரங்கம் தற்போது தமிழகத்தில் இல்லை.

டில்லியில் விஞ்ஞான் பவன் மாநாட்டு மண்டபம் இருக்கிறது அங்கு ஒரே நேரத்தில்600க்கும் மேற்பட்டவர்கள் கூட மாநாட்டில் கலந்து கொள்ளலாம். அது போன்ற ஒரு மாநாட்டு அரங்கம் சென்னை அடையாற்றில் உள்ள அய்யப்பன் சாமி கோயில் அருகே கட்டப்பட உள்ளது.

அரசு ஆலோசனை

இதுபற்றி அரசு ஆலோசித்து வருகிறது. இந்த நிலப்பகுதி தமிழக மீன் வளத்துறைக்கு சொந்தமானது.

500, 600க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொள்வதற்கு ஏற்றபடி இந்த மாநாட்டு அரங்கம் கட்டப்படும். ஏராளமான வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கும் வசதி உள்ளது. இந்த பகுதி கடற்கரை பகுதியை ஒட்டியிருப்பதால் நல்ல சூழ்நிலையில் இந்த [illegible] அமையும்.

இந்தக்கட்டிடம் அகில இந்திய அளவிலும் ஆசிய அளவில் கூடசிறப்பு வாய்ந்ததாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது

பெரியார் நூற்றாண்டு விழாவின்போதுஇதற்கான செயற்குறிப்பு தீட்டப்பட்டது. இப்போது அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

இவ்வாறு நிதி அமைச்சர் நாவலர் கூறினார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் நாவலர் கால்நடை மருத்துவ சங்கத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு மைலாப்பூரில் ஒதுக்கப்பட்ட நிலத்தில் தனியார் சிலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக உறுப்பினர் வளர்மதி கூறுகிறார்.

அப்படி ஆக்கிரமிப்பு இருந்தால் அவற்றை அகற்ற அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று கூறினார்,



கட்டுப்பாடு

கட்டுப்பாடு என்பது மற்றவர் சொல்லி வருவதல்ல. தன் மனதிலேயே உருவாவது.

— பேரறிஞர் அண்ணா



சிறந்தது

மற்றவர்கள் அறிவுரை வழங்கி அதனை ஏற்பதை விட, தானே அனுபவித்து அதனால் கிடைக்கும் அனுபவமே சிறந்தது.

— தந்தை பெரியார்

சரவணன்மகன்திருமணம் புரட்சித்தலைவர்வாழ்த்து

சென்னை, மார்ச் 21- சென்னை நகர செரீப் ஏ. வி. எம். சரவணனின் மகன் திருமணத்தில் முதல்வர் புரட்சித் தலைவர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்.

ஏ. வி. எம். சரவணனின் மகன் குகனுக்கும், கே எல். ராமநாதனின் புதல்வி நித்யாவுக்கும் இன்று காலை சென்னைவடபழனி விஜயா சேஷ் மகாலில் திருமணம் நடைபெற்றது.

இந்த மணவிழாவில் பங்கேற்கமுதல்வர்புரட்சித் தலைவர் 6.50 மணிக்கு மணமண்டபத்திற்கு வந்தார். புரட்சித் தலைவருடன் அவரது துணைவியார் ஜானகி அம்மையாரும் வந்தார்.

மணமக்கள் முதல்வர் புரட்சித்தலைவர் காலில் விழுந்து ஆசி பெற்றனர். பின்னர் 7-10 மணிக்கு வைதீக முறைப்படி திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்ததும் மணமக்கள் முதல்வர் புரட்சித்தலைவர் காலில் விழுந்து ஆசி பெற்றனர்.

மண விழாவிற்கு வந்தவர்களை ஏ.வி.எம். குமரன் ஏ. வி. எம். சரவணன் ஏ.வி.எம். பாலசுப்பிரமணியன். குமரனின் புதல்வர் சண்முகம், ஆனந்தாபிக்சர்ஸ் சுரேஷ் ஆகியோர் வரவேற்றனர்.

மணவிழாவில் மேலவைத் தலைவர் ம.பொ.சி அமைச்சர்கள் ஆர். எம். வீ., ராசாராம், அண்டேமற்றும் மன்றாடியார், நாகிரெட்டி துணை செரீப், விஸ்வநாத ரெட்டி, கி. ஆ. பெ. விஸ்வநாதம், நீதிபதி மோகன், உமாபதி, டி. டி. கே. வாசு, பாக்கியராஜ், பாரதிராஜா, பாலாஜி. கே. ஆர். விஜயா. உள்ளிட்ட ஏராளமான அரசியல் கலை உலகப் பிரமுகர்கள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

மணமக்களுக்கு இன்று மாலை வரவேற்பு நிகழ்ச்சியும் நடைபெறும் குன்னக்குடி வைத்திய நாதனின் இசை நிகழ்ச்சியும் நடைபெறுகிறது,

லீலாவதிக்கு தமிழாசிரியர் பேரவை ஆதரவு

சென்னை, மார்ச் 21— நடைபெற இருக்கும் மேலவைத் தேர்தலில் ஆசிரியர் தொகுதி கழக வேட்பாளராக போட்டியிடும் செல்வி லீலாவதிக்கு ஆதரவு தருவதென தமிழ்நாடு தமிழாசிரியர் பேரவை முடிவு செய்துள்ளது.

இந்தமுடிவுஅந்த அமைப்பின் பொதுக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக மாநிலத்தலைவர் புலவர் புகழேந்தி தெரிவித்துள்ளார்.

தஞ்சைசாமிநாதனுக்கு முஸ்லிம் பெண்கள் நலச்சங்கம் ஆதரவு

தஞ்சை, மார்ச் 21— பட்டதாரி தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் தஞ்சைசாமிநாதனை ஆதரிப்பதாக தமிழ்நாடுமுஸ்லிம்பெண்கள் நலச்சங்கம் அறிவித்துள்ளது

இதுகுறித்து தமிழ்நாடு முஸ்லிம் பெண்கள் கல்வி மற்றும் நலச் சங்கத் தலைவி கே. மரியமுல் ஆசியா விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்திருப்பதாவது:-

23-3-86 அன்று நடைபெற இருக்கும் திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு மத்திய கிழக்கு பட்டதாரிகள் தொகுதியில் போட்டியிடும் இரா. சாமிநாதன் அவர்களை ஆதரிப்பது என்று எங்களது அமைப்பு முடிவெடுத்திருக்கிறது,

சிறுபான்மை சமுதாயத்தின் நலனுக்காக ஆர்வத்துடன் செயல்பட்டு வரும் இரா. சாமிநாதன் அவர்களுக்கு இஸ்லாமிய சமுதாயத்தினர் ஆதரவளித்து வெற்றிக்கு பெருந்துணையாக இருக்குமாறு விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மரியமுல் ஆசியா தெரிவித்துள்ளார்

நாகாலாந்து அமைச்சர்ராஜினாமா

கோஹிமா, மார்ச் 21— நாகாலந்து செய்தி ஒலி பரப்புத்துறை அமைச்சர் பூசேசோட்சே தனது பதவியை ராஜினாமா செய்து விட்டார்.



தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை

அறிவிக்கை

1986-ல் 4-1-1986 முதல் 19-1-1986 முடிய நடத்தப்பட்ட அரசு தொழில் நுட்ப வணிகவியல் தேர்வுகளின் முடிவுகள் 17-2-1986-ல் ஒரு பகுதியும், 26.2.1986-ல் ஒரு பகுதியுமாக. கடைசித் தேர்வு நடைபெற்ற 19.1.1986 லிருந்து சரியாக 38 நாட்களில் அனைத்து தேர்வு முடிவுகளும் வெளியிடப்பட்டது இத்தேர்வுகளில் தேர்ச்சிப்பெற்ற மாணவர்களின் சான்றிதழ்கள் பயிலகம் மூலமாகதேர்விற்கு சென்றவர்களுக்கு பயிலகம் மூலமாகவும் தனியாராக தேர்விற்கு சென்றவர்களுக்கு தனியாகவும், தேர்வுமுடிவுகள்வெளியிடப்பட்ட நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அனுப்பப்பட்டு விட்டது என்பதை தகவலின் பொருட்டு அறிவிக்கப்படுகிறது.

தொழில் நுட்பக்கல்வி இயக்குனர்,
மற்றும் தலைவர்,
தேர்வு வாரியம்
சென்னை-600025
17.3-1986

டிஐபிஆர்-9334-86-20
(ஆர்)

மூடப்பட்டுள்ள மில் தொழிலாளர்களுக்கு நிவாரண நிதியுதவி

அமைச்சர் கே. ஏ. கே. தகவல்

சென்னை. மார்ச், 21- கோவைமாவட்டத்தில் மூடப்பட்டுள்ள மில் தொழிலாளர்களுக்குமுதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து நிதியுதவி அளிக்கப் பட்டதாக அமைச்சர் கே.ஏ.கே. கூறினார்.

சட்டசபையில் குறுகிய கால வினாவுக்கு பதிலளிக்கையில் அமைச்சர் கே ஏ. கே. கூறியதாவது:-

கோவையில் உள்ள ஜனர்தானா மில் வசந்தா, அரி ஸ்ரீபத்மா தமிழ்நாடு ஸ்பினங் மில்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு முதல்வர் நிவாரண நிதியில் இருந்து உதரித்தொகை வழங்கப் பட்டுள்ளது.

கடந்த 2 ஆண்டுகளில் 8 ஆலைகளைச் சேர்த்து5464 தொழிலாளர்களுக்கு 8 லட்சத்து 52 ஆயிரத்து 400ரூபாய் உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இப்படி நிவாரணத் தொகை அளிப்பதைவிட நிரந்தரமான பரிகாரத்தை அந்தத் தொழிலாளர்களுக்கு அளிக்க வேண்டும் என இந்த அரசு முயற்சி எடுத்து வருகிறது:

அரசு எடுத்துள்ள முயற்கள் நடவடிக்கைகள் பற்றியமுடிவுகள்என்னஎன்பதை 2.3 நாட்களில் தெரிவிக்கிறேன்.

மேட்டூர் தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகைகள் விரைவில் கொடுப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கே. ஏ. கே. கூறினார்.

மூலக்கடை கொடுங்கையூர் பாலம் விஸ்தரிப்பு

சென்னை, மார்ச் 21— சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது அமைச்சர் ப. உ.ச. கூறியதாவது:-

சென்னை மாநகராட்சி முதலாவது வட்டத்தைச் சேர்ந்த மூலக்கடையிலிருந்து கொடுங்கையூர் செல்லும் காமராசர் சாலை பாலம் விரிவு படுத்தப்பட உள்ளது. இந்த பாலத்தை ரூ 6லட்சம் செலவில் கட்டி முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த பாலம் கட்டி முடிக்கப் பட்டால் அங்குள்ள மாதவரம் பால் பண்ணை, மற்றும் சிம்சன் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பணிபுரியும்தொழிலாளர்களுக்கு நல்ல பயன் கிடைக்கும்.

கடந்த ஆண்டு ஏறபட்ட வெள்ள பாதிப்பால் அங்குள்ளகண்மாய்கள் சேதமடைந்தன. அதையொட்டி சாலையும் பழுதடைந்தன

இந்த புதியபாலம்கட்டும் வேலை விரைவில் துவங்கப் படும்.

இவ்வாறு அமைச்சர் ப உ.ச கூறினார்.

முன்னாள் ராணுவ வீரர்களுக்கு மனை ஒதுக்கீட்டில் முதலிடம்

சென்னை, மார்ச் 21— முன்னாள் ராணுவ வீரர்களுக்குவீட்டுமனை ஒதுக்கீடு செய்வதில் முன்னுரிமை அளிக்கப் படுவதாக மேலவையில் டாக்டர் நாவலர் தெரிவித்தார்.

சட்ட மேலவையில் முன்னாள் படை வீரர்களுக்கு உதவி அளிப்பது பற்றிய கேள்வி ஒன்றுக்கு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் பதிலளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

முன்னாள் ராணுவ வீரர்களுக்கு வீட்டு மனை ஒதுக்குவதில் புரட்சித் தலைவர் அரசு முன்னுரிமை தந்து வருகிறது. முன்னாள் படைவீரர்களின் மனைவிகளுக்கும், கணவனை இழந்த கைம்பெண்களுக்கும் முன்னுரிமை அளித்து வீட்டுமனைகள் ஒதுக்கப்படுகின்றன.

மாத வருவாய் 500க்கும் குறைந்த படைவீரர்களின்மனைவிகளுக்கு அவர்களுடைய வீடுகளைப் பழுது பார்க்க ரூபாய் 500 வீதம உதவி அளிக்கப்படுகிறது.

இதுவரை 350 பெண்களுக்கு (விதவைக்கு) 4 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்வரை நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

புறம்போக்கு நிலங்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டு வருகின்றன.

சிவராமன் (கழகம்). தற்போது முன்னாள் ராணுவத்தினருக்கு தரிசு நிலங்கள் தான் ஒதுக்கப் பட்டு வருகின்றன, இந்த நிலம்அவர்களுக்கு போதிய வருமானம்அளிப்பதில்லை. அதைப் பண்படுத்த அவர்கள் அதிகப் பணம் செலவழிக்க வேண்டியுள்ளது.

டாக்டர் நாவலர்: முன்னாள் ராணுவ வீரர்களுக்கு பயிரிடுவதற்கான நல்ல நிலங்களும் ஒதுக்கப்படுகின்றன. அவர்கள் இருக்கும் பகுதிகளில் எப்படி நிலம் இருக்கிறதோ அதன் அடிப்படையில் வழங்கப் படுகிறது பயிரிடும் அளவுக்கு நி[illegible]கள் இருக்குமானால் அதுவும் ராணுவ வீரர்களு[illegible] ஒதுக்கப்படுகிறது

இவ்வாறு டாக்ட[illegible]லர் கூறினார்.

அடையாறு கரைகள்

ஆர். டி. சீதாபதி [illegible] உறுப்பினர் கேள்விக்[illegible] பதிலளித்[illegible] டாக்டர் நாவலர் கூறு[illegible]யில் வெள்ளத்தால்பாதி[illegible] ஏற்படாமல் இரு[illegible] அடையாற்றின் இருகரை[illegible]களையும் பலப்படுத்த நடவடிக்கைகள் எடுத்துகொ[illegible]ளப் பட்டு வருகின்றன

இதற்காக மத்திய அரசு 1½ கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது ஆற்றங்கரை பகுதியில் மேலும் குடிசைகள் ஏற்படாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது கடந்த ஆண்டு நவம்பர் 11,12 தேதிகளில் சென்னையில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டபோது 16 பேர் இறந்தனர். அவர்கள் குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாய் வீதம் 32 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

ஜனார்தனத்தை ஆதரித்து மாணவர் அணி பிரச்சாரம்

சென்னை. மார்ச்21- பட்டதாரிகளுக்கான மேலவை உறுப்பினர் பதவிக்கு போட்டியிடும் டாக்டர் ஆர். ஜனார்தனத்தை ஆதரித்து மாணவர் அணியினர் தீவிரமாக பிரச்சாரம் செய்து வருகின்றனர் அவரை தேர்தலில் வெற்றி பெறச் செய்யகழக மாணவர் அணியினர் அயராது உழைக்குமாறு பெரியார் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வள்ளல் கேட்டுக் கொண்டார்,

மாணவர் தற்கொலை

சென்னை, மார்ச் 21— சென்னை ராயப்பேட்டை பார்டர் தோட்டத்தைச் சேர்ந்த மதுரை என்பவரின் மகன் பாஸ்கரன் வயது 19 குருநானக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பி.ஏ. படித்து வந்தார். இவர் தனது வீட்டில் [illegible]யங்கிக் கிடந்தார். மருத்[illegible]வமனையில் அனுமதிக்க[illegible]டு இறந்தார். அவர் [illegible]கொலை செய்து [illegible]காண்டதாகக் கூறப்படு[illegible]றது.

இதுபற்றிராயப்பேட்டை [illegible]ாலீசார் புலன் [illegible]சாரணை நடத்தி வரு[illegible]கள்

எண்ணெய் லாரியில் தீ: 2 பேர் சாவு

கல்கத்தா மார்ச்21— கல்கத்தாவில் போக்குவரத்து நிறைந்த பகுதியல் எண்ணெய் லாரியும், தனியார் பஸ்சும் மோதிக் கொண்ட தில், எண்ணெய் லாரி தீப்பிடித்தது.

இதில் 2 பேர் இறந்[illegible] பஸ்சும் தீப்பிடித்தது.

தலைமைக் கழக அறிக்கை எண்: 29/86.

காமராசர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகர கழகத் தோழர்களுக்கு...

கழக விதிமுறைகளுக்கு மாறாக நடந்து கழகத்தின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் செயல்பட்ட காரணத்தால காமராசர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகரத்தைச் சேர்ந்த,

வி. வீரசுப்பிரமணியம்
(அருப்புக்கோட்டை நகர துணைச் செயலாளர்)

இன்றுமுதல் கழகத்தின் உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் நீக்கப்படுகிறார்.

கழக, சார்புமன்றத் தோழர்கள் யாரும் இவருடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

கழக நிறுவனத்தலைவர் மாண்புமிகு

முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர்

அவர்களின் ஒப்புதலுடனும், பொதுச்செயலாளர் திருமிகு எஸ். இராகவானந்தம் அவர்களின் அனுமதியுடனும் இவ்வறிவிப்பு வெளியிடப்படுகிறது.

-சத்தியவாணிமுத்து
அமைப்புச் செயலாளர்
அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகம்

சென்னை-14
21-3-86

Edited and Published by K. RAVINDRAN on behalf of Thangamani Publications and Printed by All India Anna D. M. K. Perarignar Anna Trust Press at 34 Nelson Manickam Road MADRAS-29.

சோதனைபற்றிபுகாரா? தொழிலதிபரை சந்திக்க
ராஜீவ் மறுப்பு

புதுடெல்லி, மார்ச் 21- பட்ஜெட் பற்றியும், வர்த்தகர்கள் மீதான மத்தியஅரசின் நடவடிக்கைகள் குறித்தும் பேசுவதற்காக வந்த பெரும்தொழிலதிபர்களை சந்திக்க பிரதமர் ராஜீவ் மறுத்துவிட்டார்.

மத்திய நிதியமைச்சர் வி பி சிங் வரி ஏய்ப்பைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

பெரிய தொழிலதிபர்கள் வீடுகள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் வருமான வரித்துறை அதிகாரிகள் திடீர் சோதனைகளை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

பேரும் புகழும் பெற்ற வர்த்தக நிறுவனங்களிலும் சோதனை நடைபெற்றது

இந்தச் சோதனைகளை அடுத்து கோடிக்கணக்கான ரூபாய்க்கு வரிஏய்ப்பு நடைபெற்றுள்ளது தெரிய வந்துள்ளது.

மத்திய அமைச்சர் வி.பி.சிங்கின் இந்த நடவடிக்கைகள் காரணமாக பெரும் வர்த்தகர்கள் அவர் மீது புகார் கூறி வருகிறார்கள்.

கடும் நடவடிக்கை

வரி ஏய்ப்பு செய்வோர் மீது தொடர்ந்து கடும் நடவடிக்கைகளை எடுக்க மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

திடீர் சோதனைகள் பற்றியும், கணக்கில் காட்டபடாத வருவாய் பற்றியும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் கணக்குகள் பற்றியும் மேலும் விரிவாக மக்களிடையே விவரங்களை தெரிவிக்கவும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் பற்றி பிரதமர் ராஜீவுடன் பேச, சில பெரும் வர்த்தகர்கள் முயன்றனர்.

ஆனால் பிரதமர் ராஜீவ் அவர்களுடன் பேசவில்லை

இதேபோல், இந்திய வாத்தகர்சங்கப் பிரதிநிதிகளும் பிரதமரைச் சந்திக்க விருப்பம் தெரிவித்தனர். ஆனால். பிரதமர் ராஜீவ் அவர்களையும் சந்திக்க மறுத்து விட்டார்.

நாடாளுமன்றத்தில் நடைபெறும் பட்ஜெட் விவாதம் முடிந்த பிறகே தொழிலதிபர்களைச் சந்திக்க முடியும் என்று பிரதமர் ராஜீவ் கூறிவிட்டதாக தெரிகிறது,

தொழிலதிபர்கள் பட்ஜெட் பற்றி விடுத்துள்ள கருத்துகளை ஆராய்ந்து ஆவன செய்வோம் என்று நிதித்துறை அதிகாரிகள் தொழிலதிபர்களிடம் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார வளர்ச்சிக்காக அரசு அளிக்கும் சலுகைகளைத் தவறாக பயன்படுத்துவோர் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"எம். பி.க்கள் எல்லாம் நல்ல ஜென்டில்மென்"

புதுடெல்லி, மார்ச் 21— நாடாளுமன்றத்தில்நேற்று கேள்வி-பதில் நேரம் முடிந்ததும் சபை அமைதியாக இருந்தது.

பொதுவாக கேள்வி-பதில் முடிந்ததும் உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகளை எழுப்புவார்கள். சபையில் ஒரே கூச்சலும் குழப்பமுமாக. இருக்கும். நேற்று அப்படி யாரும் எந்த பிரச்சினையையும் கிளப்பாததால் சபை அமைதியாக இருந்தது.

எம் பி.களைசபாநாயகர் பலராம் ஜாக்கர் பாராட்டினார் "எல்லா உறுப்பினரும் நல்ல ஜென்டில் மென் என்று" சபாநாயகர் கூறினார்.

அவரது மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. தெலுங்குதேச உறுப்பினர் ஒருவர் எழுந்து ஒரு பிரச்சினையைப் பற்றி கேள்வி எழுப்ப சபையில் 'கசமுசா' என்ற இரைச்சல் ஏற்பட்டது.

அண்ணா நம்பிக்கு பாராட்டு விழா

கோவை, மார்ச் 21- நாடாளுமன்ற கழக உறுப்பினர் அண்ணா நம்பி முயற்சியால் வடகோவை ரெயில்வேமேம்பாலத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதற்காக முயற்சி எடுத்த அண்ணாநம்பிக்கு நாளை 22-ந்தேதி மாலை வடகோவையில் பாராட்டு விழா நடைபெறுகிறது.

விழாவில் கல்வி அமைச்சர் அரங்கநாயகம், வீட்டு வசதி வாரியத் தலைவர் திருப்பூர் மணிமாறன், கோவைத்தம்பி, மாவட்டச் செயலாளர்கள் தா.மலரவன், பொள்ளாச்சி ஜெயராமன், சின்னராஜ் எம்.எல்,ஏ., பி.என்.பரமசிவம் எம்.எல்.ஏ. இரா.ஜனார்த்தனம் எம்.எல்.சி. ஆகியோர் பேசுகிறார்கள். கோவைமுத்து தலைமையில் விழா நடைபெறும்.

முஸ்லிம் சட்டத்தை எதிர்த்து நடிகை ஷப்னா ஆஸ்மி போர் கொடி

லக்னோ மார்ச் 21- முஸ்லிம்களுக்கு விவாகரத்து வழங்குவது தொடர்பாக அரசு கொண்டு வர இருக்கும் சட்டத்தை எதிர்த்து இந்தி நடிகை ஷப்னா ஆஸ்மி போர்க் கொடி தூக்கியுள்ளார்.

முஸ்லிம் பெண்கள் விவாகரத்து செய்யப்பட்டால் கணவன்மார் ஒரு மாதம் ஜீவனாம்சம் வழங்கினால் போதும் அதற்குப் பின்பு வக்பு வாரியங்கள் அந்தப் பெண்களுக்கு ஒய்வூதியம் வழங்கவேண்டும் என்ற வகையில் புதிய முஸ்லிம் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது இதை எதிர்த்து மத்ய அமைச்சர் ஆரிப்முகமது கான் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அரசு கொண்டுவர இருக்கும் இந்த சட்டத்திற்கு எதிராக பல முஸ்லிம் மாதர் அமைப்புகள்போர்க் கொடி தூக்கியுள்ளன. இந்தி நடிகை ஷப்னா ஆஸ்மியும் இப்போது போராட்டத்தில் குதிக்கிறார்.

ஆரிப் கானின் நிலையை ஆதரிக்கும இவர் இந்த சட்டம் குறித்து பிரதமர் ராஜீவை சந்தித்து தனது எண்ணங்களை வெளியிட இருப்பதாகவும் இங்கு தெரிவித்தார்.

இந்த சட்டம் பற்றி தனது தந்தையும் புகழ் பெற்ற உருது பாடகருமான கபி ஆஸ்மியின் கருத்தை தான் அறிய விரும்புவதாக கூறிய இவர் இந்த சட்டத்திற்கு பின் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை எதிர்த்துத்தான்போராடத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

விவாகரத்தை காரணமாகக் காட்டி முஸ்லிம் பெண்களின் வாழ்க்கையுடன் விளையாடுபவர்களை மக்களுக்கு அடையாளம் காட்டும் வகையில் ஷாபானு வரலாற்றை தான் படமாக்க இருப்பதாகவும் ஆஸ்மி கூறினார்.

ஒரு பெண்ணோடு பல ஆண்டுகளாக வாழ்ந்தபின் எப்படித்தான் அவளைப் பிரிந்து அவள் பிச்சைஎடுப்பதை பார்க்ககூடிய மனப்பான்மை வருகிறதோ என்று வியப்பு தெரிவித்த ஆஸ்மிமனிததன்மையோடு வாழ வேண்டுமேயொழிய மததன்மையோடு வாழக்கூடாது என்றும் கூறினார்.

பாகிஸ்தானில் அமெரிக்க ராணுவதளம் அமைகிறது

புதுடெல்லி,மார்ச் 21- பாகிஸ்தானில் அமெரிக்க ராணுவ தளம் அமைக்க இருப்பதாக ஒரு சந்தேகம் நிலவுகிறது என்று நாடாளுமன்றத்தில் வெளி விவகார அமைச்சர் பகத் கூறினார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க போர்க்கப்பல்கள் வந்து முகாமிட்டிருப்பது குறித்து நாடாளுமன்றததில் தரம்பால்சிங்மாலிக் (இ.காங்கிரஸ்) ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்,

அதற்குப் பதிலளித்து மத்திய வெளிவிவகார அமைச்சர் பி. ஆர். பகத் கூறியதாவது:-

இது வரையில் இல்லாத அளவுக்கு இந்தியாவை அடுத்த கடற்பகுதிகளில் அமெரிக்க கடற்படை பெருமளவில் வந்து தங்கியது குறித்து உறுபபினர்கள் தெரிவித்த கவலையில் அரசும் பங்கு கொள்கிறது.

இந்துமாக் கடல் பகுதியில் அமெரிக்கராணுவ நடமாட்டம் அதிகரித்துள்ளதை அரசு கவனித்து வருகிறது.

நாட்டின் பாதுகாப்பு நலன்கள் குறித்து அரசு விழிப்புடன் இருக்கிறது.

விசாகப்பட்டினத்தில் பிறநாட்டு கப்பல்கள் அனுமதிக்கப்படுவது போலவே கராச்சியில் அமெரிக்க போர்க்கப்பல்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன என்று பாகிஸ்தான் கூறிஇருப்பது விஷமத்தனமானது. விசாகப்பட்டினத்தில் வர்த்தக கப்பல்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனபோர்க் கப்பல்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

உலகிலேயே மிகப்பெரிய விமானந்தாங்கி கப்பலான எண்டர்பிரைஸ் என்ற கப்பலும் பிற கப்பல்களும் கராச்சிக்கு வந்திருந்த போது 2 பாகிஸ்தான் போர்க்கப்பல்கள் கொழும்புக்கு சென்றது வியப்பான சம்பவம்.

அமெரிக்காவிடம் இருந்து வாங்கும் நவீனரக ஆயுதங்களுக்கு பிரதி உபகாரமாக பாகிஸ்தான் தனது ராணுவ தளங்கள் சிலவற்றை அமெரிக்கா பயன்படுத்துவதற்கு அனுமதிப்பதாகல் பரவலான ஒரு சந்தேகம் நிலவுகிறது.

இவ்வாறு பி. ஆர். பகத் கூறினார்.

பாகிஸ்தானில் எதிர்ப்பு

பாகிஸ்தானுக்கு அமெரிக்க போர்க்கப்பல்கள்வந்ததற்கு பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் வாலிகான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க போர்க்கப்பல் வந்திருப்பது வழக்கமான நிகழ்ச்சிதான். அந்த கடற்படைக்கு வசதிகளை செய்து கொடுப்பதில் பாகிஸ்தான் அரசு மகிழ்ச்சி அடைகிறது என்று பாகிஸ்தான் வெளி விவகார இலாகா கூறியிருப்பதை வாலிகான் கண்டித்தார். ஈரானுக்கு எதிராக தாக்குதல் நடத்த பாகிஸ்தானை அமெரிக்கா பயன்படுத்தப் பார்க்கிறது என்றும் வாலிகான்எச்சரித்தார்.

வெளிநாட்டில் கலைவிழா: இந்தியாவுக்கு ரூ.3கோடிசெலவு

புதுடெல்லி, மார்ச் 21- அமெரிக்கா மற்றும் பிரான்சு நாட்டில் கடந்த ஆண்டு நடைபெற்ற இந்திய கலைவிழாவிற்கு 3 கோடியே 5 ஆயிரத்து 104 ரூபாய் 68 காசு செலவானதாக மத்திய கல்வி மற்றும் கலாச்சார துணை அமைச்சர் சுசிலா ரோகட்கி நாடாளுமன்றத்தில் தெரிவித்தா.

சட்டம்-ஒழுங்கை காக்க கடும் நடவடிக்கை: ராஜீவ் வலியுறுத்தல்

புதுடெல்லி, மார்ச் 21 சட்டம்-ஒழுங்கு காக்க போலீசார் விழிப்புடன் இருந்துகடும்நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பிரதமர் ராஜீவ் கூறினார்.

மாநில போலீஸ் டைரக்டர் ஜெனரல் இன்ஸ்பெக்டர் ஆகியோர்கள் மாநாடு டெல்லியில் நடந்தது.

இந்த மாநாட்டில் பிரதமர் ராஜீவ் பேசியதாவது:-

நாட்டின் பாதுகாப்புக்கும், சட்டம் - ஒழுங்கை பேணவும் போலீஸ் அதிகாரிகள் விழிப்புடன் இருந்துசெயல்படவேண்டும். வகுப்புவாதம் தேசவிரோத செயல்கள் ஆகியவற்றை ஒடுக்க புதிய முறைகளைப் பயன்படுத்தி கடும் நடவடிக்கைகளை எடுப்பது அவசியம்.

சென்ற ஆண்டை விட இப்போது சட்டம்-ஒழுங்கு நல்ல நிலையில உள்ளது. இதற்காக போலீசாரைப் பாராட்டுகிறேன். என்றாலும் நாட்டை எதிர் நோக்கியுள்ள புதிய சவால்களை விழிப்புடன் இருந்து சமாளிக்கவேண்டும்.

இழப்பு அதிகமாகும்

பஞ்சாபில் உள்ள தீவிரவாதிகளின் பிரச்சினை மிகக் கடுமையாக உள்ளது. எல்லையிலிருந்து ஊடுருவலை முற்றிலுமாகத் தடுக்கவில்லை. எல்லைப்பகுதிகளில் போலீசார் மிகவும் விழிப்புடன் இருப்பது அவசியம்.

போதை மருந்து கடத்தலை தடுக்க அவசரமான நடவடிக்கை எடுக்க வேண்டும்

போலீசாரின் சேவையை குறைத்து மதிப்பிடக் கூடாது. அவர்களைப்புறக்கணிப்பதால் மோசமான நிலைமைகள் ஏற்படும். நிலைமைகளை சீர்படுத்த ஆகும் செலவை விட அவர்களை புறக்கணிப்பதால் ஏற்படும் இழப்புகள் அதிகமாகும்.

படிப்பினையுடன் கூடிய பயிற்சி

போதிய போலீசாரை நியமித்தல், தக்க வசதிகளை அவர்களுக்குச்செய்து கொடுத்தல ஆகியவை அவசியம், சாதாரண போலீசாருக்கு துப்பாக்கிச் சுடவும் தடியைச்சுழற்றவும் மட்டுமே பயிற்சி அளிப்பதோடு நின்றுவிடாமல் அவர்கள் பணிபுரியும் பகுதிகளில் நல்ல மரியாதையைப் பெறத்தக்க வகையில் படிப்பினையுடன் கூடிய பயிற்சி அவசியம்.

இவ்வாறு பிரதமர் ராஜீவ் கூறினார்.

திண்டுக்கல் - கொடை புதிய இருப்புப் பாதை நடராசன் கோரிக்கை

புதுடெல்லி, மார்ச்21- திண்டுக்கல், கொடைக்கானல் இடையே புதிய இருப்புப்பாதை அமைக்கும் திட்டத்தை இந்த பட்ஜெட்டில் சேர்க்க வேண்டுமென்று கழக உறுப்பினர் திண்டுக்கல் கே. ஆர். நடராசன் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

ரெயில்வே பட்ஜெட்மற்றும் அதனுடைய துணை நிதிஒதுக்கீடு மீதான விவாதத்தில பங்கேற்று கழக உறுப்பினர் திண்டுக்கல் நடராசன் பேசியதாவது:-

கரூர்-திண்டுக்கல் அகல ரெயில்பாதை திட்டத்திற்கு கடந்த ஆண்டு மூன்று கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது ஆனால் பாராளுமன்றத்திலும், ரெயிலவே கமிட்டியிலும், இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு அதிகம் செய்ய வேண்டும் என்று கேட்ட கோரிக்கையை ஏற்று மேலும் ரூபாய் ஒரு கோடியேமுப்பது இலட்சம் அதிகமாக ஒதுக்கீடு செய்தமைக்காக போக்குவரத்து துறை அமைச்சருக்கும், மத்திய அரசிற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்த ஒதுக்கீடும் போதாது அதே போன்று இந்த ஆண்டு ஒதுக்கீடும் மிகக் குறைவாகும். ஆகையால் குறைந்தபட்சம் ரூபாய் 15 கோடியாவது இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

புதிய ரெயில் திட்டம்

தமிழ்நாட்டில் இன்னும் பல புதிய இருப்புப்பாதைத் திட்டங்கள் நீண்ட காலமாக கிடப்பில் உள்ளன இந்த ஆண்டு ஒரு திட்டம் கூட சேர்க்கப்படவில்லை. ஆகவே, இந்த ஆண்டு குறைந்தபடசம் கொடைக்கானல் — திண்டுக்கல் புதிய இருப்புப்பாதை திட்டத்தையாவது இந்த பட்ஜெட்டில் சேர்க்கவேண்டும். திண்டுக்கல்நகரம் புதிதாக அமைக்கப்பட்ட அண்ணா மாவட்டத்தின் தலைநகராகவும் வர்த்தக மையமாகவும் உள்ளது கொடைக்கானல்மலைகளின் இளவரசியாக விளங்குகிறது. ஆகவே இந்த முக்கியமான கொடைக்கானலையும், திண்டுக்கல்லையும் இணைக்கும் புதிய இரயில் பாதை திட்டம் மிக அவசியமானது. ஆகவே இந்த பட்ஜெட்டிலேயே இத்திட்டத்தை சேர்ப்பது அவசியமாகும்.

20 கோடி ஒதுக்கீடு தேவை

சென்னையில் லஸ்—பீச் புதிய இரயில்பாதை திட்டம் மிகவும் மெதுவாக நடைபெறுகிறது. இது ஆறாவது ஐந்து ஆண்டு திட்டத்திலே சேர்க்கப்பட்ட திட்டமாகும். ஆகவே குறைந்தபட்சம் ரூபாய் 20 கோடியாவது இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்தால் தான் கூடியவிரைவில்இந்த திட்டம் முடிவடையும்.

ஒவ்வொரு ஆண்டும் ரயில்வே டிக்கெட்டின் விலை ஏறிக் கொண்டே இருக்கின்றது ஆனால் அதற்கு சமமாக பயணிகளுக்கு நியாயமான வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. குடி தண்ணீர் கிடைப்பதில்லை கழிப்பிடங்கள் அமைக்கப்பட்ட இடங்களில் நல்ல முறையில் பாதுகாக்கப்படவில்லை. போதுமான அளவு விளக்குகள் அமைக்கப்படவிலலை நல்ல உணவு ரயில்வே நிலையங்களில் கொடுக்கப்படவில்லை பயணிகள் எதிர்பார்க்கும் அளவிற்கு புதிய இருப்புப்பாதைகள் நல்ல முறையில் அமைக்கப்படவேண்டும். இருப்புப் பாதைகளை மின்சாரத்தால் இணைக்கவேண்டும்.

மீட்டர்கேஜ் பாதைகள் அனைத்தையும் பிராட்கேஜ் ஆக மாற்றவேண்டும். பல ரெயில்வே பாலங்களை புதுப்பிக்க வேண்டும். பல ரெயில் பெட்டிகளும், இருப்புப் பாதைகளும் மிகவும பழமையாகவும்,சரிவர இயங்காமலும் உள்ளன.

திண்டுக்கல் நகரில் மத்தியில் ரெயில்வே மேம்பாலம் அமைப்பது மிக அவசியமானது. திண்டுக்கல் நகரம் வியாபார மையமாகும் திண்டுக்கல்லில் ரெயில்வே மேம்பாலம் இல்லாததால் பொது மக்களுக்கு எல்லா. வித சிரமங்களும் ஏற்படுகிறது ஆகவே உடனடியாக மேம்பாலம் கட்டும் திட்டத்தை இந்த பட்ஜெட்டில் சேர்ப்பது மிக அவசியமாகும்.

மதுரை, சென்னை செல்லும் பல்லவன் எக்ஸ்பிரஸ் ரெயில் தற்சமயம் மதுரை செல்லாமல் திருச்சியிலேயே நிறுத்தப்படுவதால் பொதுமக்களுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது ஆகவே பொதுமக்களின் வசதிக்காக மீண்டும் மதுரை வரை செல்ல ஏறபாடு செய்யவேண்டும்.

ரெயில்வே ஊழியர்கள் 40 சதவீதத்தினர் தினக்கூலிகளாகஉள்ளனர். அவர்களை நிரந்தர ஊழியர்களாக்கி பணி பாதுகாப்பு தரவேண்டும்.

இவ்வாறு கே ஆர். நடராசன் பேசினார்.

மன்னை அம்பிகாபதி நிகழ்ச்சிகள்

மார்ச்
22- மன்னார்குடி
23- திருச்சி

புதிய வரிகள் இல்லாத தமிழக அரசு பட்ஜெட் லக்ஷ்மிகாந்தன்பாராட்டு

சென்னை, மார்ச் 21— புதிய வரிகள் இல்லாத தமிழக அரசின் பட்ஜெட்டைப் பாராட்டுவதாக மேலவையில் லட்சுமிகாந்தன் பாராட்டுத் தெரிவித்தார்.

நேற்று சட்டமேலவையில் தமிழக அரசு 86-87ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீதான பொது விவாதம் நடைபெற்றது.

பட்டதாரி தொகுதி உறுப்பினர் லட்சுமிகாந்தன் பட்ஜெட்டை பாராட்டி பேசினார். புதியவரிகள் ஒன்றும் இல்லாது இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர் பிரச்சினையை விரைவில் தீர்க்க வேண்டும் என்பதும் இந்த பட்ஜெட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்காக அரசை பாராட்டுகிறேன் என்றார்.

தமிழக முதல்வர் மற்ற மாநில முதல்வர்கள் பங்கேற்கும் ஒரு மாநாட்டைக் கூட்டி இலங்கை பிரச்சினை பற்றி பொதுவான கருத்தை உருவாக்கவேண்டும்முன்னதாக தென்னக முதல்வர்கள் மாநாட்டைக் கூட கூட்டலாம்.

ஊராட்சிதேர்தல்கள் வருமா என்ற சந்தேகம் இருந்தது அந்த சந்தேகம் அறவே நீக்கப்பட்டு சுமுகமாகவும் நல்ல முறையிலும் ஊராட்சித் தேர்தல்கள் நடத்திய இந்த அரசிற்கு எனது பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாலை அணிவிப்பு

ஊராட்சித் தேர்தலில் ஒரு நகராட்சியில் எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றார் அதே பகுதியில் அமைச்சர் ஒருவர் குடியிருந்து வருகிறார் அவருக்கு மாலை போட்டு தனது பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ள எதிர்க்கட்சி உறுப்பினர் முயற்சி செய்தா என்று எனக்கு தகவல் வந்தது. ஆனால் அமைச்சரோ தன் வீட்டுக்கு அவர் வரக்கூடாது என்று சொல்லி விட்டாராம் இப்படி லட்சுமிகாந்தன் கூறினார்.

அப்போது அரசுகொறடா ஜேப்பியார் குறுக்கிட்டு உறுப்பினர் தவறான செய்தியை இங்கு தருகிறார் நிகழ்ச்சியை இவர் நேராக பார்த்ததில்லைஎதிர்க்கட்சி உறுப்பினருக்கு அமைச்சர் மறுப்பு தெரிவித்ததாக யாரோ ஒருவர் தன்னிடம் சொன்னதாக உறுப்பினர் கூறுகிறார் இப்படி பேசுவது முறையல்ல. அமைச்சரைப் பற்றி தவறாக பேசுவது தவறுஎன்றுகூறினார்

இதைத் தொடர்ந்து உறுப்பினர்களிடையே வாக்குவாதம் நடந்தது

ஆர் எம் வீ.- பட்ஜெட் விவாதம் இங்குநடைபெறுகிறது உறுப்பினர்கள்வரவு செலவு திட்டத்தை பற்றி பேசுவதை விட்டுவிட்டு வேறு எங்கேயோ செல்கிறார்கள். அதை விட்டு விட்டு வரவு - செலவு திட்டம் பற்றி தங்கள் கருத்துக்களைக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர்ஆர். எம வீ.கூறினார். பின் லட்சுமிகாந்தன் தொடர்ந்து பேசினார்.

ஹெக்டே உடல் நலக்குறைவு

பெங்களூர், மார்ச்-21-கர்நாடக முதல்வர் ராமகிருஷ்ணஹெக்டே உடல் நலக் குறைவு காரணமாக பத்து நாடகளுக்கு தனது நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒத்தி வைத்துள்ளார்.

தற்போது அவர் டெல்லியில் தங்கி இருக்கிறார்.

செக்ஸ் சாமியார் ரஜினீஷ் தங்க பலநாடுகள் எதிர்ப்பு

மாட்ரிட், மார்ச் 21— செக்ஸ் சாமியார் ரஜினீசை எந்த நாடும் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் அவர் தனக்கென ஒரு இடம் கிடைக்காமல் உலகம் முழுவதும் விமானத்திலேயே சுற்றி வருகிறார்,

உலகிலேயே பிரபலமானவர் ரஜினீஷ் சாமியார். இவர் அமெரிக்காவில் ரஜினீஷ் ஆசிரமம் ஒன்றை அமைத்து அதில் ஆண்களுக்கும பெண்களுக்கும் செக்ஸ் கொள்கைகளை போதித்து வந்தார். இந்த ஆசிரமத்திற்கு உலகம் முழுவதும் இருந்து பலலட்சம் பேர் வந்து போவார்கள்

அமெரிக்காவில் இவர் நடத்தி[illegible]திற்து திடீரென்று எதிர்ப்புகிளம்பியது இதைத் தொடர்ந்து அவா கடந்த நவம்பர் மாதம் அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டார்

அங்கிருந்து அவர் இந்தியா திரும்பிநேபாளம் சென்றார் அங்கு சில நாட்கள் தங்கிவிட்டு பின்னர் கிரீஸ் நாட்டிற்கு சென்றார் அங்கு கிருத்துவ பாதிரியார்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால் அங்கிருந்து ரஜினீஷ் தனி விமானம் மூலம் பிரிட்டன் நாட்டிற்கு சென்றார். அங்கும் அவருக்குஅனுமதி மறுக்கப்பட்டது. அங்கிருந்து ஸ்பெயின் நாட்டிற்கு சென்றார். அந்த நாடும் இவரை அங்கு தங்க அனுமதிக்கவில்லை.

பின்னர் அங்கிருந்து ஆன்டிகுவாவுக்கு (வெஸ்ட் இன்டீஸ்) சென்றார்.அங்கு அந்நாட்டு மக்கள் இவர் வருகைக்கு கடும் கண்டனம் தெரிவித்தனர். ஏமாற்றத்துடன் அவர் அங்கிருந்து செனகல் நாட்டிற்கு சென்றார். அங்கும் அனுமதி கிடைக்கவில்லை. பல நாடுகளில் தங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட பிறகு ரஜினீஷ் கடைசியாக நேற்று அயர்லாந்திலிருந்து தனி விமானம் மூலம் புறப்பட்டார். அவருடன் அவரது பெண் சீடர்களும்சென்றனர்.

ஆனால் அவர் எந்த நாட்டிற்குச் சென்றார் என்பது யாருக்கும் தெரியவில்லை,

பிரணாப்முகர்ஜி வீட்டில் வெடிகுண்டு

புதுடெல்லி, மார்ச் 21- முன்னாள் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி வீட்டில் வெடி குண்டு வெடித்தது

பிரணாப்முகர்ஜி வீடு தெற்கு டெல்லியில் உள்ளது. அங்கு பின்பக்கம் வேலைக்காரர் வசிக்கும் அறையில் வெடிகுண்டு வெடித்தது கழிவறை இதனால் சேதம் அடைந்தது' யாருக்கும் காயம் ஏறபடவில்லை.

வெடிகுண்டு வெடித்த தகவல் அறிந்ததும் மனித சக்தி வளர்ச்சி துறை அமைச்சர் நரசிம்மராவ். லெப்டினண்ட் கவர்னர் எச் எல்.கபூர் உயர் போலீஸ் அதிகாரிகள் ஆகியோர் அங்கு சென்றனர்.

வெடிகுண்டு வெடித்தது பற்றிய விவரங்களை பிரணாப் முகர் ஜியின் துணைவியார் உமாமுகர்ஜி போலீசாரிடம் தெரிவித்தார்.

ஏற்கெனவே தங்களது கார் திருட்டுபோய் பின்பு அனாதையாக கிடந்தது பற்றியும் உமா முகர்ஜி கூறினார். தான் காரில் போகும்போது ஒரு லாரியை தன் காரில் மோத பயங்கர முயற்சி நடந்ததாகவும், 'பிரணாப் முகர்ஜியை கொல்லப் போவதாக டெலிபோனில் மிரட்டல்கள் வருவதாகவும் உமாமுகர்ஜி கூறினார்

வெடிகுண்டு வெடித்த போது பிரணாப்முகர்ஜி வீட்டில் இல்லை அவர் வந்ததும் அவரிடம் நிருபர்கள் கேட்டபோது "எதுவும் கூறுவதற்கில்லை இது போலீஸ் புலன் விசாரணை நடத்த வேண்டிய விவகாரம்" என்றார்.

கடலூர் - நாகப்பட்டினம் புதிய அனல்மின்சார நிலையங்கள் அமைப்பு

அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் தகவல்

சென்னை, மார்ச் 21— கடலூர் மற்றும் நாகப் பட்டினத்தில் அனல் மின் நிலையங்கள் அமைக்கப் படும் என அமைச்சர் பண்ருடடிராமச்சந்திரன் கூறினார்.

சடடசபையில் கேள்வி நேரத்தின் போது பதில ளிக்கையில் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் கூறியதாவது:-

தமிழகத்தில் கடலூர் நாகப்பட்டினம் போன்ற துறைமுகங்கள் உள்ள இடங்களில் புதி தாக அனல்மின் நிலையம் அமைக்க முயற்சிகள் மேற் கொண்டு வருகிறோம்,

துறைமுகங்கள் அருகில்...

திருச்சி, மதுரைபோன்ற இடங்களில் அமைத்தால் நிலக்கரியைக்கொண்டு வரு வதில் சிரமம் ஏற்படுகிறது எனவே துறைமுகங்கள் உள்ள இடங்களில் புதிய அனல்மின் நிலையங்கள் அமைக்க முயற்சி எடுக்கப் படுகிறது.

குமரி மாவட்டத்தில் ராஜக்கா மங்கலத்தில் ஒரு அனல்மின் நிலையம் அமைப்பது பரிசீலனையில் உள்ளது,

வட சென்னை மேட்டூர் தூத்துக்குடி அனல்மின் நிலைய விரிவாக்கம் போன்ற திட்டங்களுக்கு மத்திய அரசிடம் அனுமதி பெற்றுள்ளோம். நெய் வேலியில் 2வது அனல்மின் நிலையம் அமைந்துள்ளது இந்தஅரசேஎடுத்த முயற்சி யாகும்.

நெய்வேலி 3 வது சுரங்கம்

நெய்வேலியில் 3வது நிலக்கரி சுரங்கத்தை அமைத்து அங்கு ஒரு பெரிய அனல்மின் நிலையம் அமைக்கவேண்டும் என்று மைய அரசிடம் வற்புறுத்தி வருகிறோம். தமிழகம் மின் சாரத்தை பொறுத்தவரை சுயசார்பு உடையதாக இருக்க வேண் டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் கூறினார்.

மேலும் கழக உறுப் பினர் தாமரைக்கனி கேள் விக்கு பதிலளிக்கையில் கோவை நகர குடிநீர் உபயோகத்துக்காக சிறு வாணி அணையிலிருந்து கிடைக்கும் நீரைப் பயன் படுத்தி 3.51 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 மெகாவாட் திறன் கொண்ட நீர் மின் நிலையம் அமைக்க மின்வாரியம் திட்டம் தீட்டி யுள்ளது.

இத்திட்டத்தை செயல் படுத்த கேரள அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த மின் நிலையத்தி லிருந்து 2½ கோடி யூனிட் மின்சாரம் கிடைக்கும் என்று அமைச்சர் தெரிவித் தார்.

அண்டேக்கு விருது

புதுடெல்லி மார்ச் 21- சமூக மருத்துவ சேவைக் காக டாக்டர் பி.சி.ராய் தேசிய விருது தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அண்டேக்கு வழங்கப்பட்டுள்ளது. கர் னாடக சுகாதார அமைச் சர் டாக்டர் திம்மேகவுடா வும் இந்த விருதைப் பெற் றுள்ளார்.

இது பற்றி அமைச்சர் டாக்டர் அண்டே விடுத் துள்ள அறிக்கையில் "முதல் வர் புரட்சித்தலைவர் எடுத்த முயற்சிகளும் சேவைகளும் இந்த விருதை பெற்றுத்தந்துள்ளது.

இந்த சிறப்பினைத் பெறஒத்துழைத்த டாக்டர் கள் சுகாதார ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி" என்று குறிப்பிட்டுள்ளார்.

யானைக்கு காது குத்தப்படுமா? சட்டசபையில் தாமரைகனிகேள்வி

சென்னை, மார்ச், 21- சட்டசபையில் தமிழக காடுகளில் உள்ள யானை களை அடையாளம்கண்டு பிடிக்க அவைகளுக்கு காதுகுத்தப்படுமா என்று கழக உறுப்பினர் தாமரைக் கனி வினவினார்.

தாமரைக்கனியின் துணை கேள்வியை அடுத்து சபை யில் பெரும் சிரிப்பு ஏற்பட் டது.

காட்டுப்பகுதியில்வறட்சி ஏற்படுவதால், யானைகள் தமிழகத்தில் இருந்து வெளிமாநிலங்களுக்குச் செல்லுகின்றன.

ஆகவே தமிழக யானை களை அடையாளம் காண அவைகளுக்கு காதுகுத் தப்படுமா என்று தாமரைக் கனி கேட்டார்.

இதற்கு அமைச்சர் ஆர்.எம்.வீ. பதிலளிக்கை யில், உறுப்பினர் இத்த கையஆபத்தான யோசனை களைத் தெரிவிக்க வேண் டாம் என்று கூறினார.

ராயபுரத்தில் ரூ. 5 கோடியில் மேம்பாலம் விஸ்தரிப்பு

சென்னை, மார்ச் 21— நேற்று சட்ட மேலவை யில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அமைச்சர் ப. உ. ச, கூறியலாவது:-

சென்னை - கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் சென்னை ராயபுரம் மன்னார்சாமி கோவில் தெருவில் குறுக்கிடும் இருப்புப்பாதையின் மீது மேம்பாலத்தை அகலப்படுத்த அரசு பரிசீலனை செய்து வருகிறது.

இருவழித் தடத்துக்குப் பதிலாக நான்கு வழித் தட பாதை ஏற்படுத்த ரூபாய் 5 கோடியே 60 லட்சம் செலவிட உத் தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ப. உ. ச. கூறினார்.

பாராட்டு விழா கூட்டம்

கோபி, மார்ச் 21— பெரி யார்மாவட்டத்தில்வெற்றி பெற்ற ஊராட்சி மன்றத் தலைவர், உறுப்பினர்கள். தாராபுரம் கூட்டுறவு நூற்பாலைத்தலைவர் கள்ளிப்பட்டிமணி, பால் உற்பத்தியாளர் ஒன்றியத் தலைவர் வள்ளல் ஆகி யோருக்கு பாராட்டு விழா கூட்டம் கோபி சிறுவனூ ரில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு வெள்ளிங் கிரி தலைமை வகித்தார். கூட்டத்தில் வாரணாசி தவசியப்பன், ரசித் ஞானசுந்தரம், சின்னராஜ் துரைசாமி, தங்கராஜி, பாலு, பூபதி, நாச்சிமுத்து ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். முடி வில் நவரசம் ஜி.கே எஸ். கலை நிகழ்ச்சி நடைபெற் றது.

கடன் வழங்கும் விழா என்ற பெயரில் நடந்த மோசடிகள்

ஆலடி அருணா குற்றச்சாட்டு

புதுடெல்லி,மார்ச் 21- கடன் வழங்கு விழா என்ற பெயரில் வங்கி கள் நடத்திய விழாவில் நடந்த மோசடிகள் குறித்து மத்திய அரசின் கவனத்துக்கு கழக உறுப்பினர் ஆலடி அருணா கொண்டு வந் தார்.

மாநிலங்களவையில் ஆலடிஅருணா பேசுகையில் கூறியதாவது:-

சென்னையில் வங்கிகள் சார்பில்கடன்வழங்கு விழா நடந்தது மத்திய அமைச் சர்ஜனார்த்தன பூஜாரி அந்த விழாவில் கலந்து கொண்டார். கடன்பெறு வோருக்கு அவர் கவர்களை வழங்கினார். அந்த கவர் களில் கடன் பெறுவதற் கான நிபந்தனைகள் அடங்கியகடிதம் இருந்தது.

வேறு சிலருக்கு சைக்கிள், தையல் இயந்திரம் ஆகி யவை வழங்குவதாக அறி விக்கப்பட்டிருந்தது.

கடன்வழங்கு விழாமுடிந் ததும் அந்த சைக்கிள், தையல் இயந்திரங்களை சம்பந்தப்பட்ட கடைக் காரர்களே கொண்டுபோய் விட்டனர்.

இந்த சம்பவம் பற்றி மத்திய அமைச்சர் ஜனார்த்தன பூஜாரி ஒரு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்



இவ்வாறு ஆலடி அருணா கூறினார்.

கழக கூட்டங்கள்

வில்லிவாக்கம் 32வது வட்டம்

சென்னை 32வது வட்ட கழகத்தின் சார்பில் வில்லி வாக்கம் பஸ் நிலையம் அரு கில் ஞானப்பிரகா சம் தலைமையில் கழகம் பொதுக்கூட்டம் கோவை ஜார்ஜ் முன்னிலை யில் இன்று (வெள்ளிக் கிழமை) மாலை 7.30 மணிக்கு நடக்கிறது

கோடம்பாக்கம் குமார், ஜே, சி. டி. பிரபாகரன் மதுசூதனன், எம்.எல்.சி நீலகண்டன்,சேகர் மற்றும் பலர் பேசுகிறார்கள்

25வதுவட்டம்

சென்னை திருவல்லிக் கேணி 25வது வட்ட கழக சார்பில் இன்று வெள்ளிக் கிழமை) மாலை 7 மணிக்கு கழகப் பொதுக்கூட்டம் லாயட்ஸ் ரோட்டில் வட்ட செயலா ளர் கோபால் தலைமையில் நடக்கிறது. ஜே பாலன் முன்னிலை வகிக்கிறார்.

க.சுப்பு எம் எல்.சி., மது சூதனன் எம். எல். சி, தரங்கை கண்ணன் மற்றும் பலர் பேசுகிறார்கள்.

சிவகாசி

நாள்:- 23-3-86 ஞாயிறு இரவு 7 மணி இடம்:- பாலாடித் தோப்புத் திடல் தலைமை, கே,வேலுச்சாமி முன்னிலை: அப்துல் காதர் வரவேற்பு: எம். சாகுல் அமீது பேசுவோர்: சட்டமன்ற உறுப்பினர் வி. பாலகிருஷ் ணன் முன்னாள்சட்டமன்ற உறுப்பினர் சுந்தரராஜன், கே.கே.சாமி மணிமேகலை, மானகிரி பாண்டியன் மற் றும் பலர்.

பாராட்டு பெறுவோர் ஒன்றிய தலைவர் டி. ராதா கிருஷ்ணன். நகர் மன்ற உறுப்பினர்கள் அசன்பது ருதின், பி. சின்னத்தம்பி,

நன்றி:- ஏ. பழனிச்சாமி

அதிகாரிகள் பற்றி 'திடீர்'புகார் கூறுவதா?

சென்னை, மார்ச் 21- அதிகாரிகள் பற்றிமுன் அறிவிப்பின்றி புகார் கூறுவது சரியல்ல என்று சட்டசபையில் துணை சபாநாயகர் கூறினார்.

சட்டப் பேரவையில் மார்க்சிஸ்ட் உறுப்பினர் வி பி சிந்தன் பேசினார் அவர் பேசும்போது மாவட்ட அதிகாரி ஒரு வர்க்குதான் எழுதியகடிதம் ஒன்று பற்றி குறிப்பிட்டு கூறத் தொடங்கினார்.

அப்போது சபைக்கு தலைமை வகித்த துணை சபாநாயகர் வி பி பாலசுப்பிரமணியம் குறுக்கிட்டு அதிகாரிகள் மீது எந்த குற்றச்சாட்டு கூற முற்பட்டாலும் அதை முன் கூட்டியே எழுதித்தர வேண்டும்.

அப்படிசெய்யாவிட்டால் அதில பல பிரச்சினைகள் ஏற்பட்டுவிடும். நீங்கள் ஏற்கனவேஒருஅதிகாரிமீது கூறிய குற்றச்சாட்டு பிரச்சினைக்கு உள்ளாகி இருக்கிறது,ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் கொடுக் கப்பட்டகடிதத்தை அந்தஇன்ஸ்பெக்டர் கிழித் தெறிந்ததாக சொன்னீர் கள் நீங்கள் சொன்ன அந்த குற்றச்சாட்டு அடிப்படை யில் அந்த இன்ஸ்பெக்டரை வரவழைத்து விசாரித் தோம். அவர் கிழிக்கப் பட்ட தாக சொல்லப்பட்ட கடிதத்திற்குப் பதிலாக கிழிக்கப்படாத கடிதத் தையே கொடுத்தார்என்று கூறினார்.

மீண்டும் சிந்தன் எழுந்து அந்த இன்ஸ்பெக்டர் அந்த கடிதத்தை கையில் கசக்கி கொடுத்தவர் முகத்தில் எறிந்ததாகக் கூறினார்.

இதற்கும் துணைசபா நாயகர் பாலசுப்பிரமணி யம் மறுப்பு தெரிவித்தார்.

அந்த இன்ஸ்பெக்டர் கொடுத்த கடிதம் என் அறையில் இருக்கிறது கசக்கப்படாத நிலையில் அப்படியே இருக் கிறது. ஆகவே தான் சொல்கிறேன் குற்றச் சாட்டுகளை சொல்லு முன்பு அதுகுறித்து எழுதிக் கொடுத்து பேச அனுமதி பெற வேண்டும் என்று தீர்ப்பளித்தார்.

இதன்பிறகு வி பி சிந்தன் அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு தொடர்ந்து பேசினார்.

தப்பி ஓடிய சோப்ராஜ் அறையில் "புளூபிலிம்"

புதுடெல்லி,மார்ச் 21- பிரபல கடத்தல் மன்னன் சோப்ராஜ் தப்பி ஓடிய போது அவனது அறை யில் பல "புளூ பிலிம" களை விட்டு விட்டு ஓடினான் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கொலை, கொள்ளை, கடத்தல் போன்ற வழக்கு களில் கைது செய்யப்பட்ட சோப்ராஜ் திகார் ஜெயி லில் அடைக்கப்பட்டான், அவனும் அவனது கூட் டாளிகள் 5 பேரும் கடந்த வாரம் ஜெயிலிலிருந்து தப்பிஓடினர். இந்தசெய்தி பெரும் பரபரப்பை ஏற் படுத்தியது அவர்களைப் பிடிக்க இந்தியாமுழுவதும் போலீசார் உஷார் செய் யப்பட்டனர்.

இதற்கிடையில் அவரு டன் தப்பி ஓடிய 2 கைதி களை போலீசார் கைது செய்துள்ளனர்.

சோப்ராஜ் தப்பி சென்ற வுடன் ஜெயிலில் அவனது அறையை போலீசார் சோதனையிட்டனர்.

அங்கு கலர் டி. வி. வீடியோ டெக், மற்றும் பல வீடியோ கேசட்டுகள் இருந்தன அந்த கேசட்டுகள் அனைத் தும் புளூ பிலிம் என்று விசாரணையில் தெரிய வந் துள்ளது.

ஆனால்இது பற்றிபோலீ சாரிடம் கேட்டபோது பதி லளிக்க மறுத்து விட்டனர்



